
ஓம்
சிவ சிவ
திருச்சிற்றம்பலம்

சிவனே போற்றி



அன்பளிப்பு :

அருள்நெறித் திருக்கூட்டம்

கண்டவராயன்பட்டி
இராமநாதபுர மாவட்டம்.

சிவ சிவ

நமச்சிவாய நம

திருச்சிற்றம்பலம்

அன்பே சிவம்

தீபாவளி வெளியீடு:

தமிழ்க்கடல்

திரு. ராய. சொ. இயற்றிய

சிவனே போற்றி

(தமிழ் அருச்சனை)

வெளியிட்டவர்:

நா. அருணாசலன்

செயலாளர்.

அருள்நெறித் திருக்கூட்டம்

கண்டவராயன்பட்டி

1978

ஓம்

சிவ சிவ

அன்பே சிவம்

நூல்முகம்

சித்தத்தை சிவன்பால் வைத்தே என்ற அடிப்படையில் சிவனடியார்கள் சிவனை வணங்குகின்ற காரணமென்ன? சிவபெருமான் சிறந்த பெருநோக்குடையவர். என்ன குற்றம் செய்தாலும் அதை மன்னிக்கும் நோக்குடையவர். ஈவதே இவர் கடமை இதனாலன்றோ? பக்தர்கள், யோகிகள் சிவனை நோக்கித் தவம் செய்கின்றனர்.

நமது தமிழகத்தில் பிற மாநிலங்களைவிட சிவனுக்கு சிறந்த பெருமையுண்டு. அதனால்தான் **தென்னாடுடைய சிவனே போற்றி** என்று சிறப்பாக பாராட்டப்பெறுகிறது. அதிலும் தமிழ் மக்கள் தன்னலமிலா பிறர்க்கென வாழ்பவர்களல்லவா? இதன் அடிப்படையில் நாம் சிவனைப்பற்றி என்ன கூறுகிறோம். **“எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி”** என சிவபெருமான் அகில உலகினருக்கும் பொதுவானவர் எனப் பெருமைபெற கூறி வருகின்றோம்.

இத்தகைய பெருமையோடு நாம் வணங்கும் **“சிவபெருமானை”** தமிகத்தில் தமிழ் மக்கள் பிற மொழியில் வணங்குவதை விட்டு நம் தேனினுமினிய தாய் மொழியிலே வணங்க வேண்டும் என்பது நமது திருக்கூட்டத் தீர்மானம்.

இத்தீர்மானத்தின் அடிப்படையில் நம் பெருமதிப்பிற்குரிய அருள்நெறித் தந்தையும் இன்றையத் தெய்வீகப் பேரவையின் பொதுச் செயலாளரும் திருவண்ணமலை ஆதீனத்தின் மகா சந்நிதிதானமுமாகிய, **தவத்திரு குன்றக்குடி அடிகளார்** அவர்கள் கட்டளைக்கு இணங்கி நம்மிடையே சிறந்த சிவம்பெருக்கும் சீலராக சிவனடியாராக சிவநேசச் செல்வராகயிருந்த சிவபதம் பெற்ற தியாகசீலர் "சிவமணி" முத்தமிழ் முழக்கிய முதல்வர் தமிழ்க்கடல் திரு. **ராய. சொ. அவர்கள்** இயற்றிய **சிவ வணக்கத்தை, சிவனே போற்றி** என்ற திருப்பெயருடன் நூலாக்கி, **விநாயகர், சுப்பிரமணியர், ஐயப்பன், சிவன், சிவலிங்கம், நந்தியம் பெருமான், அம்பிகை** ஆகிய இறைவழிபாட்டுக்குரிய திருவுருவப் படங்களுடன் வெளியிட்டு பக்தர்களுக்கு சமர்ப்பிக்கின்றோம்.

அன்பர்கள் பக்தர்கள் அனைவரும் இதனைப் படித்துப் பாராயணம் செய்து திருக்கோவில்களெல்லாம் "**தமிழ் அருச்சனை**" செய்து தேனினுமினிய தமிழோசை கேட்கச் செய்வீர்களாக!

கண்டவராயன்பட்டி
காளயுக்தி ஐப்பசி ௰௩
1978


நா. அருணசலன்
செயலாளர்
அருள்நெறித் திருக்கூட்டம்

✻

ஓம்
கணபதியே நம

தவம் வடிவம் தாங்குகின்ற
தயையுடையாய் சரணம்

அருள்மிகு கற்பக விநாயகர்



பிள்ளையார்பட்டி

பிள்ளையார் பட்டி என்னும்
பேரருட் சுரங்கத்தின் கண்
உள்ளவன் மலையிற் பூத்த
உருவத்தின் இயற்கைத் தோன்றல்
தெள்ளிய மனத்தர்க் கெல்லாம்
திருவருள் வழங்கும் தெய்வம்
கள்ளமில் பக்தர் தந்தை
க்ற்பக மூர்த்தி யன்றோ!

- கவிஞர் கண்ணதாசன்.

ஓம்

முருகா சண்முகா

குன்றக்குடி

அருள்மிகு சண்முகநாதன்



குன்றக்குடி குமரன் குன்றுவளம் தருவான்
என்றும் நலம்தருவான் என்பதல்ல - துன்பத்தில்
குன்றும் மக்கள் இன்னல் தீர்ந்திட குமரனையே
என்றும் வணங்கிடுவோம்.

ஓம்
சுவாமியே சரணம்

அருள்மிகு ஐயப்பன்



அன்பருள்ளம் மேவுகின்ற ஐயப்பா! நாடோறும்
உன்நாமம் சொன்னாலே உள்ளமெலாம் உருகிடுமே
இன்னலெலாம் நீங்கிடுமே இன்பமெலாம் நிறைந்திடுமே
நன்மையெலாம் வந்திடுமே நலமெலாம் கூடிடுமே.

கற்றாரின் மனம்போலக் கசிந்துதினம் காக்ககாக்க
நற்செல்வம் நலமுடனே நல்கிதினம் காக்ககாக்க
பொற்புடனே வளர்ந்தோங்கிப் பொலிந்துதினம் காக்ககாக்க
பற்றறுத்து வாழ்வுஉயர் பரிந்துதினம் காக்ககாக்க.

ஐயப்பா மெய்யப்பா ஐயமில்லை உனைநாட
பயமில்லை துணையுண்டு பகையில்லை பணிவுண்டு
துயரில்லை துணிவுண்டு தோல்வியில்லை செயமுண்டு
அயர்வில்லை உயர்வுண்டு உன்பாதம் அடைக்கலமே.

புலவர் - சுப. விசுவநாதன்.

ஓம்
சிவ சிவ

சிவபெருமான்




சொற்றுணை வேதியன் சோதிவானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக்கைதொழ
கற்றுணைப் பூட்டியோர் கடலிற்பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சிவாயவே.

ஓம்

சிவ சிவ

பிள்ளையார்பட்டி குகைக் கோவிலுக்குள் வீற்றிருக்கும் திருவீசர்



நமச்சிவாய வாழ்க நாதன் தாள்வாழ்க

இமைப்பொழுதும் எந்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க.

உ

சிவமயம்

திருவீசரின் சிறப்பு

இச் சிவபெருமான் ஆயிரம் ஆண்டுகளுக்குமுன் குகைக்குள் (சுயம்பு) பிர்மலிங்கமாகத் தோன்றியிருக்கிறார் நம் விநாயகப்பெருமான் கஜமகா சூரனை சம்ஹாராம் செய்ததும் அவர்க்குண்டான பிர்மஹத்தி தோசம் விலக இவரை நோக்கி தவம்புரிந்து பிர்மஹத்தியிடமிருந்து விடுதலை பெற்றார் என்பதே **பிள்ளையார்பட்டி**க்குண்டான முதல் பெருமையும் சிறப்புமாகும்.

இப்பெருமானை வணங்கினால் நமக்கு ஏற்படும் சகல தோஷங்களும் விலகும் ஆனால்; **நம்பிக்கை துரோகம்** ஒன்று மட்டும் விலகாது.

இதனை பலர் அறிந்தும் அறியாமலும் இம்மூர்த்தியைப் பற்றி தெரியாமலுமிருந்து வருவதால் இதன் சிறப்பை தெரிந்து பக்தர்கள் தெரிசித்துப் பலன்பெறவே இந்நூலில் "திருவீசர்" திருவுருவப் படம் வெளியிடப் பெற்றிருக்கிறது.

"எல்லாம் சிவன் செயல்"

சிவமயம்

சிவ வணக்கம்

அம்பலத்து	ஆடும்	அரனே !	போற்றி !
ஆனைமா	முகனை	அளித்தவ	போற்றி !
இளைய	முருகனை	ஈன்ருய்	போற்றி !
ஈறிலாப்	பெருவாழ்வு	ஈவாய்	போற்றி !
உமைக்கொரு	கூறளி	உத்தம	போற்றி !
ஊழி	முதல்வ ! நின்	ஒண்கழல்	போற்றி !
எந்தையும்	யாயுமாய்	இயைந்தனை	போற்றி !
ஏழை	பங்க ! நின்	இணையடி	போற்றி !
ஐயா !	அரசே !	அமுதே	போற்றி !
ஒழிவற	நிறைந்த	ஒருவ	போற்றி !
ஓசையாய்ப்	பொருளாய்	ஒன்றினை	போற்றி !
ஔவிய	நெஞ்சினர்க்கு	அரியாய்	போற்றி !
அஃகம்	வளர	அருள்வாய்	போற்றி !
கல்ஆல்	அமர்ந்த சொற்	கடந்தவ	போற்றி !
" ங "ப்போல்	வளைய	நவில்வாய்	போற்றி !
சடையாய்	விடையாய்	உடையாய்	போற்றி !
ஞயமாய்	உரைதர	நயப்பாய்	போற்றி !
மடம்படு	வாழ்வை	மாய்ப்பாய்	போற்றி !
வணங்கத்	தலையை	வைத்தாய்	போற்றி !
தழுவக்	குழைந்த	தண்ணளி	போற்றி !
நச்சரவு	ஆட்டிய	நம்பி	போற்றி !
பந்தணை	விரலாள்	பங்க	போற்றி !
மண்டிய	தழல்நிற	வண்ணு	போற்றி !
மயல்கெடுத்து	ஆளும்	மணுள	போற்றி !
அரவம்	அணிந்த	அந்தண	போற்றி !

நிலம், தீ	வான், கால்,	நீரே	போற்றி !
வண்கவி	வள்ளல்கள்	வள்ளால்	போற்றி !
மழவிடை	ஏறும்	மன்னு	போற்றி !
அளவெலாம்	கடந்த	ஐயா	போற்றி !
பிறப்புஇறப்பு	இல்லாப்	பெரும	போற்றி !
மனமாசு	அறுசிவ	மணியே	போற்றி !
கற்றவர்	உண்ணும்	கனியே	போற்றி !
காலனை	உதைத்தருள்	கழற்கால்	போற்றி !
கிழவா	இளையாய்	குழவி	போற்றி !
கீழ்மேல்	உலகெலாம்	கிளர்ந்தாய்	போற்றி !
குழவி	மதியணி	குழகா	போற்றி !
கூத்துகந்து	ஆடும்	கொற்றவ	போற்றி !
கெடுதல்	தவிர்த்துஆள்	கேடிலி	போற்றி !
கேதம்	கெடுத்த	கிளர்ஒளி	போற்றி !
கைலைசேர்	முழுமுதற்	கடவுளே	போற்றி !
கொல்புலித்	தோல்உடைக்	கோமான்	போற்றி !
கோதறு	நற்குணக்	குன்றே	போற்றி !
சந்தனச்	சாந்தின்	சுந்தர	போற்றி !
சாதிகள்	கடந்த	தத்துவ	போற்றி !
சிலையால்	எயில்எரி	சேவக	போற்றி !
சீருடைச்	சிவபுரத்து	அரசே	போற்றி !
சுந்தரன்	தனைத்தடுத்து	ஆண்டவ	போற்றி !
சூது, பொய்,	களவு	தொலைப்பாய்	போற்றி !
செந்தமிழ்	தந்த	செம்மலே	போற்றி !
சேக்கிழார்	தீந்தமிழ்	திளைப்பாய்	போற்றி !
சைவம்	தழைக்கநில்	தவமே	போற்றி !
சொல்லும்	பொருளுமாம்	தூமணி	போற்றி !
சோதியுள்	சோதியாய்த்	துலங்குவாய்	போற்றி !
ஞானசம்	பந்தனை	நயந்தாய்	போற்றி !
ஞிமிறுசேர்	கொன்றை	நீள்சடை	போற்றி !

ஞேயநல்	அடியார்	நினைவே	போற்றி!
தண்தமிழ்ச்	சங்கத்	தலைவா	போற்றி!
தாயே	தாதாய்	சங்கரா	போற்றி!
திருவா	சகம்பெறு	செல்வா	போற்றி!
தீஞ்சுவைக்	கவிஞர்பாத்	தேனே	போற்றி!
துரியம்	கடந்த	தொல்லோய்	போற்றி!
தூக்கிய	திருவடிச்	சோதி	போற்றி!
தென்னாடு	உடைய	சிவனே	போற்றி!
தேவா	ரம்நுகர்	செவியாய்	போற்றி!
தையலைத்	தலைக்கொள்	சதாசிவ	போற்றி!
தொண்டர்	உளம்அமர்	தூயோய்	போற்றி!
தோலும்	துகிலும்	புனைவாய்	போற்றி!
நதிசேர்	செஞ்சடை	நம்பா	போற்றி!
நாற்றிசை	விளக்காம்	நாதா	போற்றி!
நினைப்பவர்	நெஞ்சில்	நின்றாய்	போற்றி!
நீறு, செம்,	பசுமை	நிறத்தாய்	போற்றி!
நுண்ணியாய்	அகன்றாய்	ஆழ்ந்தாய்	போற்றி!
நூபுரச்	சீரடி	தருவாய்	போற்றி!
நெற்றிமேல்	ஒற்றைக்	கண்ணாய்	போற்றி!
நேயத்	தேநில்	நிமல	போற்றி!
நைவளப்	பண்,பா	நாடினை	போற்றி!
நொந்தவர்த்	தாங்கும்	நோன்தாள்	போற்றி!
நோய், பசி	தீர்க்கும்	தாய்அருள்	போற்றி!
பன்னிரு	திருமுறைப்	பாடலாய்	போற்றி!
பார்த்தனுக்கு	அருள்செய்	பரம்பொருள்	போற்றி!
"பித்தன்"	எனப்பெறு	வித்தக	போற்றி!
பீடெலாம்	கொண்ட	பெம்மான்	போற்றி!
புத்தேள்	போற்றும்	பொன்னடி	போற்றி!
பூவார்	சென்னிப்	புனிதா	போற்றி!
பெருநஞ்சு	உண்டருள்	பெரியோய்	போற்றி!

பேதைமை அகற்றும் பிஞ்ஞக போற்றி!
பைஅராப் பூண்ட பரமனே போற்றி!
பொய்வளர் நெஞ்சம் புகாதாய் போற்றி!
போக்கு வரவிலாப் பொருளே போற்றி!
மதன்படத் திறந்த நுதல்விழி போற்றி!
மாதவர் மகுடமா வயங்குவாய் போற்றி!
மிண்டு மனத்தரை விடுவாய் போற்றி!
மீறிய புலவோர் விருந்தே போற்றி!
மும்மலம் அறுக்கும் முக்கணா போற்றி!
மூவர் தமிழ்க்கடல் மூழ்குவாய் போற்றி!
மெய்கண் டானை ஆட் கொண்டனை போற்றி!
மேலவர்க்கு எல்லாம் மேலவ போற்றி!
மையல் கெடுத்தாள் வரதனே போற்றி!
மொழிஅரை யன்கவி முதலே போற்றி!
மோகித்து அணைவார்க்கு ஏகனே போற்றி!
யானை உரிபோர்த்து அருளினை போற்றி!
வங்கக் கடல்நஞ்சு உண்டாய் போற்றி!
வாதவூர் வள்ளல்பா மாந்தினை போற்றி!
வினைகெடுத்து ஆளும் முனைவ போற்றி!
வீட்டின்பு அருள,வல் விமலா போற்றி!
வெண்ணீறு ஆடிய புண்ணிய போற்றி!
வேதமும் அங்கமும் மேயாய் போற்றி!
வையகம் வாழவே போற்றி! போற்றி!

108 போற்றி.

உ
சிவமயம்

நந்தியம் பெருமான்




முந்து தேவர்கள் யாவருக்கு முதல்வன்
இந்து வாணுதல் ஈசன்செயல் காவலன்
வந்து வேண்டுவார் வாழ்வுறவே அருள்
நந்தி தேவன் நற்றருள்தொழு தேத்துவாம்.

அருட்கவி. கு. செ. இராமசாமி, M. A.

ஓம்
சக்தியே நம

வைத்தீஸ்வரன் கோவில்

அருள்மிகு தையல் நாயகி



(கண் திறந்த மங்கை இவளே)

கயலும் பொன்னும் கலந்திருக்கும்
காவிரிக் கரையில் ஓரத்தில்
வயல்கள் சூழந்த வளநாட்டில்
வைத்தீஸ்வரன் கோவில் தன்னில்
தயையுடன் விளங்கி, நமைக்காக்கும்
தையல் நாயகி தாழ்பணிந்து
நலமுடன் வாழ்வோம் பல்லாண்டு
நலமுடன் வாழ்வோம் பல்லாண்டு.

நன்றியும் வாழ்த்தும்

தமிழ்நாட்டில் தொழிலாளர் நலம் காத்துப் பெருமை பெறுவதிலும், உயர்தர நூல்களை நூற்று விநியோகிப்பதிலும், சிறந்து பெருமை பெறுகிறது.

மதுரை மாவட்டம்

விசாலாட்சி நகர் (விளாங்குடி)

ஸ்ரீ விசாலாட்சி மில் (பி) லிமிடட்

இதன் நிர்வாக இயக்குநர் (தலைவர்)

திரு லெ. நாராயணன் செட்டியார் அவர்கள்

கண்டரமாணிக்கம்

இவர்கள் எங்கள் திருக்கூட்டத்தினர் நடத்தும் வழிபாடுகள், சமயத்தொண்டு ஆகியவைகளுக்குக் காட்டிவரும் பேரன்பிற்கும், உதவிக்கும் எங்கள் இதயம் கனிந்த நன்றியும் வாழ்த்துக்களும் உரியதாகுக.

கண்டவராயன்பட்டி
காளயுக்தி ஐப்பசி ௰௩
30—10—78


நா. அருணாசலன்
செயலாளர்
அருள்நெறித் திருக்கூட்டம்

மதுரை

திரு ஆலாவாய் அப்பன்

அருள்மிகு சோமசுந்தரப்பெருமானின்

மூலக் கோபுரம் குடமுழுக்கு விழா காட்சி



இத்திருக்கோவிலின் அறங்காவலராக இருந்து பணியாற்றி

இக்குட முழுக்கு விழாவை நடத்தி பெருமைபெற்றவர்

விசாலாட்சி மில் அதிபர்

திரு. லெ. நாராயணன்செட்டியார் அவர்களாகும்